கன்னியாகுமரி மாவட்டத்தில் மாணவர்களுக்குத் தனிப் பேருந்து

*636 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கென தனி பஸ் விடும்படி கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர், கன்னியாகுமரி டி. டி. எஸ்ஸுக்கு உத்தரவிட்டிருக்கிறாரா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. மகாதேவன்: தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தில் பீக் அவர் என்று சொல்லக் கூடிய நேரத்தில் பல இடங்களில், மார்த்தாண்டம் போன்ற இடங்களில் கல்லூரி மாணவர்கள பஸ் இல்லாமல் தொல்லைப்படுகிறார்கள். அங்கே அதிக பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படும் தொல்லையைக் கவனத்தில்கொண்டு 18 சர்வீஸ்கள் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவை :

Nagercoil to Thittuvilai,
Kurusadi to Mekkamandapam,
Kurusadi to Verkilambi,
Kurusadi to Monday Market,
Kurusadi to Thuckalai,
Nagercoil to Marungoor,
Nagercoil to Parakkai,
Nagercoil to Aloor,
Nagercoil to Colachel,
Nagercoil to Monday Market,
Nagercoil to Palvoor,
Nagercoil to Mekkamandapam,
Nagercoil to Verkilambi,
Nagercoil to Palliyadi (via) Kurusadi,
Thiruvattar to Virivilai,
Melpalai to Iranipuram,
Karingal to Kuzhithurai and
Kollengode to Thoduvetti.

Madurai Sourashtra Co-operative Bank

* 637 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the Board of Directors of the Madurai Sourashtra Co-operative Bank have granted membership to a person adjudged as an insolvent;

(*b*) if so, the details thereof and the reasons therefor ;

(*c*) whether it is a fact that a loan is still pending recovery from him; and

(*d*) if so, the action taken to recover the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) கடன் வழங்கப்பட்ட பிறகு இன்ஸால்வென்ட் எனத் தீர்ப் பளிக்கப்பட்ட இருவர்களிடமிருந்து, கடன் தொகை வசூலிக்கப்படவில்லை.

(எ) இந்தக் கடன்களைக்குறித்து வங்கியின் இயக்குனர்மீது ஸர்-சார்ஜ் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, is it not a fact that the election for the filling up of three vacancies in the Bank was held on 16–6–1968 and that a member, who was a defaulter, was taken as a Director against the rules and the Deputy Registrar of Co-operative Societies also issued a show cause notice? When the matter was *sub judice* this Director was taken. Are the Government aware of this and if so what action have they taken on this?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I have already stated that among the Directors of the Bank, there was no one, who was adjudged insolvent.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இன்சால்வன்சி கொடுத்தவர் களிடமிருந்து, வசூலிக்கப்படவில்லை என்றார்கள். அப்படிக் கொடுத்தவர் கள் யார் யார், எவ்வளவு பாக்கி அவர்கள் செலுத்தவேண்டும் என்பதை தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இன்சால்வென்சி கொடுத்த வர்கள், சதாசிவம் என்பவரும், பூர்ணசாரி என்பவரும், ஆக இரண்டு பேர்கள். இவர்களின் பாக்கி, சதாசிவம் ரூ. 435 ஒன்றும், 335 ரூபாய் ஒன்றும்; திரு பூர்ணசாரி, ஒன்று ரூ. 430-ம், இன்னொன்று ரூ. 335-ம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட் டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) இராதாபுரம் ஊராட்சிப் பகுதியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப் படாமையும் அதனால் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு என். சௌந்தர பாண்டியன் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறார்கள். அதாவது,

'The teachers employed in the local bodies and the other private managements have not been paid their salary due on 1st March till this date and consequent plight of the teachers and their families and the impact on the students on their studies and the consequent public concern and anxiety in Radhapuram Panchayat Union area in Tirunelveli district'. முற்பகல் 10 00

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்டிருக்கிற காரணத்தால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) வத்தலக்குண்டில் பொதுக் கிணற்று நீரைப் பருகிய சிலரும், பூசாரிப்பட்டியில் உணவு விடுதியில் உணவு அருந்திய சிலரும் மரணம் அடைந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு என். எஸ்.வி. சித்தன், திரு. வெ. சுவாமிநாதன், திரு. ஆர். கருப்பையா ஆகியோர் வத்தலகுண்டு என்ற இடத்திற்கு அருகில் தண்ணீர் குடித்த காரணத்தினால் 9 பேர் இறந்ததைக்குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.